# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)


Gangai Amman Kovil Street, Karapakkam, Chennai – 600 097
Phone:044-28389040 E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in


**No. TNTEU/R/Admin./2018/** 1585 **நாள்:** 31.07.2018

**முனைவர்.என்.இரவீந்திரநாத் தாகூர்.** Ph.D.
gjpthsh; (ngh)

**பெறுநர்**

முதல்வர்கள்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன்
இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள்.

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகள் - 2018-19-ஆம் கல்வியாண்டிற்கான முதலாமாண்டு பி.எட் பட்டவகுப்புகள் தொடங்குதல் - சார்பு.

----

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகளில் 2018-19-ஆம் கல்வியாண்டிற்கான முதலாமாண்டு பி.எட். பட்ட வகுப்புகள் நாளை 01.08.2018 முதல் தொடங்குகிறது. மாணவர்கள், ஆசிரியர்கள், முதல்வர்கள் நிர்வாகத்தினருக்குத் துணைவேந்தர் தனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறார்.

தமிழக அரசும், நடுவண் அரசும் இணைந்து உயர்கல்வி நிறுவனங்கள் உன்னதமான நிலையை அடைவதற்குப் பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. எனவே, இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள் மத்திய மாநில அரசுகள், பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு ஆகியன குறிப்பிட்டுள்ள கீழ்க்காணும் செயல்பாடுகளைத் தவறாது பின்பற்றி உயர்கல்வியின் தரத்தைத் தொடர்ந்து உயர்த்துவதற்கு இக்கல்வியாண்டில் முழு பங்களிப்பை வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- ஒவ்வோர் ஆண்டும் 100 சதவீதம் மாணவர்கள் தேர்ச்சி
- ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் 50 சதவீதம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல்
- கல்லூரியில் ஆசிரியர் காலிப் பணியிடங்கள் எப்பொழுதும் 10 சதவீதத்திற்கு மிகாமல் பார்த்துக்கொள்ளல்.
- ஓவ்வோர் ஆண்டும் ஆசிரியர்கள் தங்களது பாடப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சிகள் குறித்து பயிற்சிபெற்று, அவற்றை வகுப்பறைகளில் பயன்படுத்துதல்
- கல்லூரி வளாகங்களில் மழைநீரைச் சேமித்தல்
- கல்லூரி வளாகங்களைப் பசுமையாக்குதல்
- கல்லூரி வளாகங்களில் சூரிய ஆற்றலைப் பயன்படுத்துதல்
- கல்லூரி வளாகங்களில் பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் தவிர்த்தல்

எனவே, கல்வியியல் கல்லூரிகள் மேற்கண்ட செயல்பாடுகளை இக்கல்வியாண்டில் முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்துமாறும், அதுகுறித்த விவரங்கள் / ஒளிப்படங்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

31/7/18

பதிவாளர் (பொ)